## சபரகமுவ மாகாண அரச சேவையில் விளையாட்டு கள அலுவலர்களின் முகாமைத்துவ உதவியாளர் –தொழில்நுட்ப பிரிவு 2(MT2-2016) சேவைப் பிரிவு தரம் III விளையாட்டு அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு

## திறந்த போட்டிப் பரீட்சை-2021

சபரகமுவ மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் **விளையாட்டு அலுவலர் தரம் III** பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக 10.04.2021 ஆம் திகதிக்கு வயது 18 மேல் மற்றும் 35 வயதிற்கு மேற்படாதவராக தகைமையுள்ள சபரகமுவ மாகாணத்தில் வசிக்கும் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**2021 ஏப்ரல்** மாதம் அளவில் பரீட்சை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

01. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி :- 2021.04.10

02. இணைத்துக் கொள்வதற்கான தகமைகள் :-

(2.1) கல்வித் தகமைகள் மற்றும் தொழிற்தகமைகள்

(அ)

I. தாய்மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) , கணிதம் , மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

மற்றும்

II. கல்விப் பொதுத்தராதரப் (உயர் தரம்) பரீட்சையில் சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தலும்.

மற்றும்

III. விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டு விழாக்களில் மாகாண மட்டத்தில் (மாவட்டங்களுக்கிடையில்) இடம்பெறும் போட்டிகளில் 1ஆம் , 2ஆம் இடங்களைப் பெற்றிருத்தல் , தேசிய விளையாட்டுப் போட்டிகளில் 1ஆம் , 2ஆம் மற்றும் 3ஆம் இடங்களைப் பெற்றிருத்தல்,விளையாட்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கங்களினால் நடாத்தப்படும் தேசிய கிண்ணத்திற்கான போட்டிகளில் 1ஆம் 2ஆம் மற்றும் 3ஆம் இடங்களைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ)

I. தாய்மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்), கணிதம் , மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

மற்றும்

II. தெற்காசிய போட்டி, ஆசிய போட்டி, பொதுநலவாய சபை போட்டி, உலக கிண்ண போட்டி மற்றும் ஒலிம்பிக் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இருத்தல்.

**03. பொது தகமைகள்**

(அ). **2021.04.10** திகதிக்கு விண்ணப்பதாரர் சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன், விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்திர வதிவிடமில்லை எனில், விண்ணப்பதாரியின் துணைவர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.

(ஆ). சிறந்த நடத்தை மற்றும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்

(இ). விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்

(ஈ). விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு **18 வயதிற்கு குறையாத 35** வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (பிறந்த திகதி **1986.04.10** இருந்து **2003.04.10** வரை)

**04. இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் :-**

பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2016 மற்றும் 2016.02.25 திகதியுடைய முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்ப பிரிவு )2MT2-2016 (இற்கான சம்பள வகுதி MT 02-2016 அமைய ரூ.30,140–10x350–11x370–10x560–10x660-ரூ.49,910/- ஆக மாத சம்பளம் உரித்துடையதாகும். மேலும் அரச உத்தியோகத்தர்களுக்கு அவ்வப்போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் பிற கொடுப்பனவுகளும் உரித்துடையதாகும்.

**05. இப்பதவி நிரந்தரமானதும் , ஒய்வூதியமுடையது.**

**06. இணைத்துக் கொள்ளும் முறை :-**

வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருப்பின் எழுத்து மூலமான போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/90 விதிமுறைகளின் படி தகமைகளின் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப ஆட்சேர்த்தல் நடைபெறும். சித்தியடைவதற்காக ஒரு வினாப்பத்திரத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு 40% ஆகும்.

தொழிற்கல்வித் தேர்வுகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரிகளும் தங்களது அடிப்படை தகுதிகளை சோதிக்க பொது நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.அந்த விண்ணப்பதாரிகள் எழுத்துப் போட்டித் தேர்வு மற்றும் தொழிற்கல்வித் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்களின் தொகையில் தகுதியின் அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

07. எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம் :-

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாட விதானம் | நேரம் | முழுப் புள்ளி | தேர்ச்சி புள்ளி |
|---|---|---|---|---|
| 1. உளச்சார்புப் பரீட்சை மற்றும் பொது அறிவு | தர்க்க ரீதியாக சிந்தித்தல் மற்றும் முடிவுகளை எடுத்தல் தொடர்பான அறிவினைப் பரிசோதிக்கும் வகையிலான பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கியது. இலங்கையின் பௌதீக, அரசியல், பொருளாதார சமூக மற்றும் கலாசார சூழல் உள்ளடங்களாக (பல்தேர்வு வினாக்கள் உள்ளடங்கும்) தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் விளையாட்டுத் துறை சார்ந்த நடைமுறை தகவல்கள் மற்றும் தடகள மற்றும் குழு விளையாட்டுக்கள் தொடர்பான அடிப்படை விதிகள் பற்றிய அறிவினை சோதிக்கும பல்தேர்வு வினாக்கள் மற்றும் குறுகிய வினாக்களுடன் கூடிய வினாப்பத்திரமாகும். | 01 1/2 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. மொழித் திறன் | கருத்துக்களைத் தெரிவித்தல் / கிரகித்தல்/எழுத்துப் பிழைகள்/இலக்கணப் பயன்பாடு,மொழி மற்றும் கட்டுரை தொடர்பான அறிவினை சோதிக்கும் வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரமாகும். | 01 மணித்தியாலம் | 100 | 40 |

இப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமாக நடாத்தப்படும்.கிடைக்கின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நடாத்துகின்ற நகரம் தீர்மானிக்கப்படும். பரீட்சையில் ஆள் அடையாளத்தினை உறுதிபடுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.வெற்றிடங்களை நிரப்புவதற்காக போதிய விண்ணப்பங்கள் கிடைக்காது விடின் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக சபரகமுவ மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

07.II. தொழில் முறை சோதனை

| இல | பொருள் புலம் | அதிகபட்ச மொத்த மதிப்பெண் | தேர்ச்சி மதிப்பெண் |
|---|---|---|---|
| 01 | Drop stick(எதிர்வினை வேகத்தினை அளத்தல்) | 12.5 | 05 |
| 02 | Dips (உடல் வலிமையை அளத்தல்) | 12.5 | 05 |
| 03 | Sit-ups (வயிற்று தசைகளின் வலிமையை அளத்தல்) | 12.5 | 05 |
| 04 | குனிவதற்கான சோதனை (Sit & Reach) வளைந்து கொடுக்கும் தன்மையை அளத்தல் | 12.5 | 05 |
| 05 | நின்றபடி நீளம் தாண்டல் (Standing long jump) பாதங்களின் வலிமையை அளத்தல் | 12.5 | 05 |
| 06 | Shuttle run உடனடியாக தோரணையினை மாற்றும் திறனை அளத்தல் | 12.5 | 05 |
| 07 | 60 மீற்றர் வேக சோதனை (60m Sprint) வேகத்தினை அளத்தல் | 12.5 | 05 |
| 08 | ஓட்டச் சோதனை (1000m Run) சகிப்புத் தன்மையினை அளத்தல் | 12.5 | 05 |
| | முழுப் புள்ளிகள் | 100 | 40% |

➢ தொழில் முறை சோதனைக்கான விடயப்பரப்பு

| பொருள் புலம் | நோக்கம் | சோதனை முறை | புள்ளி வழங்கள் |
|---|---|---|---|
| Drop stick(எதிர்வினை வேகத்தினை அளத்தல்) | எதிர்வினை வேகத்தினை அளத்தல் | • மீற்றர் கோலினைக் கொண்டு சோதனைக்கு உட்படுத்துபவரின் பழக்கக் கையினைப் பிடித்து ,விரல்களை விரித்து அதனை தொட்டவாறு , கைவிட்டு அதனை உடனடியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். | • சோதனைக்கு உட்படுத்துபவரின் உள்ளங்கை அடிப்பகுதியில் இருந்து கோல் கீழே விழும் அளவிற்கு அண்ணளவாக ஒரு சென்றிமீற்றர் அளவை கணக்கிடவும். |
| Dips (உடல் வலிமையை அளத்தல்) | வயிற்று தசைகளின் வலிமையை அளத்தல் | ஆண்<br>• நிலத்தில் நீட்டி பாத விரல்கள் மற்றும் உள்ளங்கை நிலத்தில் படுமாறு இருத்தி உடல் பாரத்தினை தாங்கி கை மற்றும் கால்களில் உடலினை மேலும் கீழும் அசைக்கும் தடவைகளை கணக்கிடுதல்.<br><br>பெண்<br>• மேலே குறிப்பிடப்பட்ட உடற்பயிற்சியினை பெண்களுக்காக உள்ளங்கை மற்றும் பாதத்தினை முழங்கால்களில் வைத்து அசைக்க வேண்டும்.<br>• உடல் அசைக்கும் தோரணை நிலத்திற்கு சமாந்தரமாக மேல் , கீழாக கொண்டு செல்ல வேண்டும். | • ஆரம்ப சமிஞ்சை மூலம் 30 வினாடிகளில் சரியான இயக்கத்தை அதிக முறை செய்தல். |
| Sit-ups (வயிற்று தசைகளின் வலிமையை அளத்தல்) | வயிற்று தசைகளின் வலிமையை அளத்தல் | • கீழே அமர்ந்து முழங்காலை மடித்து உடம்பிற்கு அருகில் பாத விளிம்பினை கொண்டு வந்து கைகளினை தலைப் பின்னால் வைத்து ஆரம்ப தோரணையில் இருந்து உடலில் மேற்பகுதி | • ஆரம்ப சமிஞ்சை மூலம் 30 வினாடிகளில் சரியான இயக்கத்தை அதிக முறை செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| குனிவதற்கான சோதனை (Sit & Reach) வளைந்து கொடுக்கும் தன்மையை அளத்தல் | வளைந்து கொடுக்கும் தன்மையை அளத்தல் | • 20 சென்றி மீற்றர் உயரமான பெட்டி மேல் நிற்க.<br>• அளவிடும் நாடாவுடன் கைகளை முடிந்தவரை கீழ் நோக்கி கொண்டு செல்க.<br>• உடலினை கீழே கொண்டு வந்து கைகளின் நிறுத்தத்தைக் குறித்துக் கொள்ளவும்.இரண்டு விநாடிகள் அப்படியே இருக்கவும். | • தொடக்க நிலையில் இருந்து உடலை வளைப்பதன் மூலம் அளவிடும் நாடாவில் அதிகபட்ச சென்றிமீற்றரைக் குறிக்கவும். |
| நின்றபடி நீளம் தாண்டல் (Standing long jump) பாதங்களின் வலிமையை அளத்தல் | பாதங்களின் வலிமையை அளத்தல் | • தொடக்க கோட்டினை தொடாதவாறு உங்கள் கால்களை ஒன்றிணைத்து கோட்டிற்கு பின்னால் வைத்துக் கொள்ளவும்.<br>• முழங்கால்களை சற்று வளைத்து கைகளை முன் நோக்கி நீட்டி முடிந்தவரை குதிக்கவும். | • குதிக்கும் போது தொடக்கக் கோட்டில் இருந்து கைவிடப்பட்ட பாதத்தின் குதிக்கால் வரையிலான தூரத்தினை அளவிடவும். அதை அருகாமையான 0.1 செ.மீ வரை கணக்கிடவும்.<br>• அதிக பட்ச செயற்திறனைப் பதிவு செய்ய மூன்று வாய்ப்புக்களை வழங்குதல். |
| Shuttle run உடனடியாக தோரணையினை மாற்றும் திறனை அளத்தல் | வேகத்தினை மற்றும் சுறு சுறுப்பினை அளத்தல் (Speed & agility | • 10 மீற்றர் ஓடும் பாதையினைக் குறித்துக் கொள்ளவும்.<br>• தொடக்கக் கோட்டினை தொடாதவாறு கோட்டிற்கு பின்னால் நிற்றல்.<br>• தொடக்க நிலையில் இருந்து போட்டியாளர் ஆரம்பித்து 10 மீற்றர் தூரத்தில் குறிப்பிட்ட எல்லையினைத் தொட்டு மீண்டும் ஆரம்ப இடத்திற்கு சென்று அதனை தொடுதல்.<br>• மீண்டும் முன்னோக்கி சென்று குறித்த இடத்தின் எல்லையினை தொட்டு மீண்டும் ஆரம்ப இடத்திற்கு சென்று அதனை தொடுதல். | • மேற்கண்ட செயற்பாட்டிற்கு எடுக்கப்பட்ட நேரத்தினை குறித்துக் கொள்க.<br>• நேரத்தை 0.01 விநாடிக்கு கணித்தல். |

| | | | |
|---|---|---|---|
| 60 மீற்றர் வேக சோதனை (60m Sprint) வேகத்தினை அளத்தல் | எதிர்வினை மற்றும் வேக முடக்கத்தினை அளவிடுதல் (Speed acceleration) | • இறுதிக் கோட்டினை போட்டியாளர் சென்றடைந்ததைக் கண்டவுடன் நிறுத்தற் கடிகாரத்தினை நிறுத்தி நேரத்தினை பதிவு செய்தல்.<br>• "ஆயத்த" கட்டளைப்படி அவரது தொடக்க நிலைக்கு வருதல்.<br>• தொடக்க சமிக்ஞைக்கு ஏற்ப வேகமாக முன்னோக்கி ஓடுதல்.<br>• தொடக்க சமிக்ஞைக்கு அமைய நிறுத்தற் கடிகாரத்தினை செயல்படுத்தல். | • இறுதிக் கோட்டினை போட்டியாளர் சென்றடைந்தவுடன் நிறுத்தற் கடிகாரத்தினை நிறுத்தி சென்றடைந்த நேரத்தினை குறித்துக் கொள்ளல். நேரத்தினை இறுதி 0.01 விநாடிக்கு கணித்தல். |
| ஓட்டச் சோதனை (1000m Run) சகிப்புத் தன்மையினை அளத்தல் | வேகம் மற்றும் சகிப்புத் தன்மையை அளவிடுதல் | • 400 மீற்றர் ஓட்டப் பாதையில் 1000 மீற்றர் ஓட தயாராகுதல். | • குழுவாக ஓடுவதற்கு தயார்செய்து நிறுத்தற் கடிகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஓட்டத்திற்கான நேரத்தினைக் கணித்தல். |

08. விண்ணப்பிக்கும் முறை :-

8.1 இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப A-4 அளவிலான கடதாசிகளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தொடரிலக்கம் 01 முதல் 03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் இல 04 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை தமது கையெழுத்தினாலே நிரப்புதல் வேண்டும்.மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.2 பரீட்சைக் கட்டணம் ரூ.1000/- ஆகும்.இப் பரீட்சைக் கட்டணத்தை சப்ரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவாகுமாறு சப்ரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்) செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அலுவலகங்களுக்கு ( தபால் அலுவலகம் , வங்கி ) பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.3 சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2021.04.10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் **"செயலாளர் , சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு , மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி , புதிய நகரம் , இரத்தினபுரி "** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"சபரகமுவ மாகாண அரச சேவையில் தரம் III விளையாட்டு அலுவலர் பதவி ஆட்சேர்ப்பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2021 "** எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் , பதவிக்குரிய தகமைகளை பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

8.4 விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கேற்ப தகமைகள் உள்ளதா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் போதுமான தகமைகள் இல்லை என அறியப்படின் , அவரது அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும். இவ் விண்ணப்ப அறிவித்தலில் அடங்காத ஏனைய விடயங்கள் இருப்பின் அவை தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும்.இவ் விளம்பரத்தில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.அத்துடன் இவ்வாட்சேர்ப்பு அறிவித்தலின் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிராகரித்தல் தொடர்பான இறுதித் தீர்மானமும் இவ் ஆணைக்குழுவுக்குரியது.

8.5 2014 ஆம் ஆண்டு விளையாட்டு அலுவலர் திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் இவ்வாட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்கு கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதுடன் விண்ணப்பத்திரத்தினை மீண்டும் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

பீ.எஸ்.ஆர்.எம்.விஜயராஜ,
செயலாளர்,
சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
சபரகமுவ மாகாணம்
2021.02.22